DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.209/2023 | Deposition of Witness for : PW4 |
| Name : திரு.வைகுண்டதாஸ் | Father/Husband Name : திரு.ஞானமணி |
| Age : 59 | Village : |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19 May 2026.
A1 Present. A3 absent. Petition filed and allowed. A2 died.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.04.2023 ஆம் தேதி நாசரேத் காவல்நிலையத்தில் பணியாற்றியபோது காலை 07.00 மணிக்கு நாசரேத் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சாமர்வெல் செல்வராஜ் என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்தபோது தேரிப்பனை கோயில்குடியிருப்பு ஜெயகோபால் மனைவி சாரதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நாசரேத் காவல்நிலைய குற்ற எண்.20/2023, பிரிவு 447, 427, 294(பி), 506(2) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act, 2002 ன் கீழ் வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்தார்.

2. நான் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் காளிதாஸ், ஆண்ட்ரூஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். 08.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சேதப்படுத்தப்பட்ட உடைந்த நிலையில் உள்ள ஜல்லிக்கல், சிமெண்ட் கலவையுடன் கூடிய வெளீர் பச்சை நிறம் கொண்ட கல் ஒன்று, மேலும் சேதமடைந்த கம்பி வேலிகளையும், சேதமடைந்த முள்வேலி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். படிவம் 91ஐ முறைப்படுத்தி வழக்கு சொத்தினை நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட வழக்கு பொருட்கள் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளதுதான். **மேற்படி சான்று பொருட்கள் சா.பொ.1, 2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்தில் வைத்து புகார் மனு கொடுத்த சாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் செய்தேன். பின்பு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சாமர்வெல் செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காலை 10.00 மணியளவில் கோயில் தெருவில் வைத்து எதிரி ஜெயசீலன்


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.19 17:30:30 +0530

என்பவரை கைது செய்து நிலையம் 10.30 மணிக்கு கொண்டு வந்து பாராவிடம் ஒப்படைத்தேன். அன்றை தினம் எதிரியை தங்கள் மேலான நீதிமன்றத்திற்கு தகுந்த வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன். 02.04.2023 ஆம் தேதி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி சித்திரைக்குமார் மற்றும் சேதமதிப்பு சான்று வழங்கிய சாட்சி ஆண்ட்ரூஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. 28.04.2023 ஆம் தேதி எதிரி மரிய ஜேசுபாலன், வசந்தி ஆகியோர்கள் மாண்புமிகு தூத்துக்குடி அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை. 02.05.2023 ஆம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து இவ்வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து P.R.No.104/2023 கிடைக்கப்பெற்றேன். எதிரிகள் மரிய ஜேசுபாலன், ஜெயசீலன் ஆகியோர்கள் மீது 444, 427, 294(பி), 506(2) IPC, 4 of TNPHW Act ன் கீழும், 2 ஆவது எதிரி வசந்தி என்பவர் மீது பிரிவு 447, 427, 294(பி), 506(2) IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து கனம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன்.

<u>1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

5. வழக்கு சம்பவம் நடைபெற்று ஒரு நாள் கழித்துதான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கு சம்பவம் நடைபெற்ற அன்றே புகார் மனு அளிக்கப்பட்டது. நான் புகார் வாங்கிய அன்றே வழக்கு பதிவு செய்தேனா அல்லது ஒருநாள் கழித்து வழக்கு பதிவு செய்தேனா என்றால் 01.04.2023 ஆம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஒரு நாள் கழித்து வழக்கு பதிவு செய்ய காரணம் என்ன என்றால் 01.04.2023 அன்று தான் புகார் மனு அளிக்கப்பட்டது, அன்றைய தினமே வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பே புகார் அளிக்கப்பட்டது அந்த புகார் மனுவிற்கு CSR No.165/23 வழக்கு பதிவு செய்யப்பட்டது, விசாரணை செய்யப்பட்டது, அந்த விசாரணையில் எதிரிகள் எந்த சொத்தையும் சேதப்படுத்தமாட்டோம் என காவல்நிலையத்தில் கூறிச்சென்றதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஆனால் மறுநாள் காலை எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டனர். என்னிடம் இருக்கும் ஆவணப்படி, CSR No.165/23 என்றைய தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 28.03.2023 அன்று கொடுக்கப்பட்டது. CSR கொடுக்கப்பட்ட தேதியில் இருந்து 4 நாட்கள் கழித்து தான் வழக்கு சம்பவம் நடைபெற்றுள்ளது என்றால் எதிரிகள் புகார்தாரரின் இடத்தில் கம்பிவேலி அமைப்பதை தடுத்து பிரச்சனை செய்ததால் புகார்தாரர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார், அந்த புகாரின் அடிப்படையில் 28.03.2023 அன்று எனது விசாரணையில் முடிவுக்கு பின்புதான் புகார்தாரர் வழக்கு சம்பவ இடத்தில் பென்சிங் அமைத்தார். CSR No.165/2023 கொடுக்கப்பட்ட முன்பு பென்சிங் வேலி எதுவும் இல்லை என்றால் பழைய பென்சிங் இருந்தது. அ.சா.1 புகார்தாரர் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லிய இடத்தின் சர்வே நம்பர் ஏதாவது கொடுத்தாரா என்றால் சர்வே நம்பர் 485/2A ஆகும். முதல் தகவல் அறிக்கை, அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் தனக்கு 485/2A என்ற இடம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. 485/2A என்ற இடம் அ.சா.1 க்குத்தான் பாத்தியப்பட்டது என்று கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் போன்றோரிடம் நான்


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.19 17:30:37 +0530

விசாரித்தேனா என்றால் இல்லை. சர்வே நம்பர் 485/2A அ.சா.1க்கோ, அவரது கணவரின் தகப்பனாருக்கோ பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் துறை அலுவலர்களை நான் விசாரித்தால்தான் பிரச்சனைக்குரிய இடத்தின் உரிமையாளர் யார் என்ற விபரம் எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் அவர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை.

6. பார்வை மகசரில் வரையப்பட்ட இடம் 1ஆவது எதிரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும் அதன் சர்வே எண்.485/2A37 என்றால் சரியல்ல. அ.சா.1ன் மாமனாருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் சர்வே எண்.485/2A47 என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரை நான் சரியாக விசாரித்திருந்தால் நிலத்தின் உண்மையான உரிமையாளர் யார் என்ற விபரம் தெரியவந்திருக்கும் என்றாலும் என்னுடைய விசாரணையின் குறைபாட்டால்தான் நிலத்தின் உரிமையாளர் யார் என்ற விபரம் சரியாக தெரியவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட இடம் அ.சா.1க்கோ, அவருடைய மாமனாருக்கோ பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றால் சரியல்ல. நான் தயார் செய்த வரைபடத்தில் சிமெண்ட் கல்துகள்கள் கீழே விழுந்ததற்கான அடையாளங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சம்பவ இடத்தை சுற்றி கல் இருந்ததாக வரைபடம் போடப்பட்டுள்ளது. கல்துகள்கள் கீழே விழுந்ததற்கான அடையாளங்கள் எதுவும் குறிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7. சேதமதிப்பு சான்று வழங்கிய நபரை நான் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று என் முன்பு அவர் சேதமதிப்பு செய்தார் என்றால் சரிதான். சேதமதிப்பு தரக்கூடிய அளவிற்கு சேதமதிப்பு சான்று வழங்கிய நபர், சேதப்படுத்தப்பட்ட கல்லின் உற்பத்தியாளரா அல்லது வியாபாரம் செய்பவரா என்றால் வியாபாரம் செய்பவர், உற்பத்தியாளர் இல்லை. சேதமதிப்பு சான்று 31.03.2023 அன்று எனக்கு தரப்பட்டது என்றால் சரிதான். சேதமதிப்பு சான்று என்னுடைய காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பே சம்பந்தப்பட்ட நபரை விசாரித்து நான் வாங்கி, உள்நோக்கத்தோடு இந்த வழக்கை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேதமதிப்பு சான்று புலன் விசாரணை அதிகாரியான என்னால் உற்பத்தி செய்யப்பட்டு பின்பு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சேதமதிப்பு சான்றுக்கும் முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 02.04.2023 அன்று என்னுடைய முன்னிலையில் நான் அழைத்துச் சென்று சான்று வாங்கியதாக கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல.

8. இடப்பிரச்சனையில் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரில் நான் சொன்னதை எதிரிகள் கேட்காததால் என்னடைய ஒத்துழைப்போடு இரண்டாவது முறையாக அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட புகாருக்கு நான் ஒருதலைபட்சமாக விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணம் மற்றும் பார்வை மகசர், வரைபடம் போன்றவை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சாட்சிகள் அனைவரையும் வழக்கு தேதியில் உள்ள தேதிக்கு முன்பாகவே அவர்களை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும்


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.19 17:30:41 +0530

எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு புகாரின் அடிப்படையில் போடப்பட்ட வழக்கில் என்னுடைய விசாரணை சரியாக செய்யாமல் ஒருதலைபட்சமாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்று நோக்கத்தோடு என்னால் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் பொய் வழக்கு பதிவு செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.19 17:30:46 +0530

Judicial Magistrate, Sathankulam.